**கவனிக்க.-** *2019.05.03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2123 - 2019 මැයි මස 10 වැනි සිකුරාදා - 2019.05.10

*2123 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 980 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 982 |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 983 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 988 |
| நானாவித அறிவித்தல்கள் | - |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2019, மே 31ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, மே மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால்மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1115- B 81521 - 5403 (2019/05)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றினால் அரசுடமையாக்கப்பட்ட பறிமுதல் செய்யப்பட்ட மணல் பகிங்க ஏல விற்பனை - 2019

1. சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றினால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அரசுடமையாக்கப்பட்ட பொருட்களின் (மணல்) ஏல விற்பனை 2019.05.17 ஆந் திகதியன்று மதியம் 2.00 மணியளவில் நீதிமன்ற வளாகத்தில் நடாத்தப்படும்.

2. விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களினை (மணல்) மன்றில் பதிவாளரின் அனுமதியுடன் ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்பதாக பார்வையிடலாம்.

3. பகிரங்க ஏலவிற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பொருட்களிற்கு (மணல்) உரிய விலை கிடைக்கப் பெறாவிடத்து ஏலவிற்பனையிலிருந்து மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

4. விற்பனை செய்யப்பட்ட பொருட்களுக்கான பணத்தை உடன் செலுத்தி உடனடியாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும். எல்லாக் கொடுப்பனவுகளும் காசாகவே செய்யப்பட வேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. பொருட்களை கொள்வனவு செய்வோர் தங்களது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

| விற்பனை செய்யப்படவுள்ள பொருட்கள் | அளவு |
|---|---|
| 1. ஆற்று மணல் | கியூப் 100 |
| 2. ஊற்று மணல் | கியூப் 60 |

எம். ஐ. எம். றிஸ்வி,
நீதிவான்,
நீதிவான் நீதிமன்றம்,
சம்மாந்துறை.

5-412/1

---

திருத்தம்

**நீதிவான் நீதிமன்றம் - சம்மாந்துறை**

2019.04.12 ஆந் திகதிய 2119 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரமான இல. 4-757 ஆம் இலக்க அறிவித்தலுடன் தொடர்புடையது.

சம்மாந்துறை பிரதேசத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக 2019.04.28 ஆந் திகதி நடைபெறவிருந்த ஏல விற்பனை நடைபெறவில்லை என்றும் அவ் ஏலவிற்பனை 2019.05.25 ஆந் திகதி நடாத்தப்படுமெனவும் அறியத் தருகின்றேன்.

எம். ஐ. எம். றிஸ்வி,
நீதிவான்,
நீதிவான் நீதிமன்றம்,
சம்மாந்துறை.

5-412/2

# ஆய விற்பனையும் குத்தகையும்

## மாதம்பை பிரதேச செயலாளர் பிரிவு

*2019, யூலை மாதம் முதல் 2020, யூன் மாதம் வரை*

*கள்ளுத் தவறணை விற்பனையும் குத்தகை விற்பனையும் 2019- 2020*

*2019, யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2020, யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள கள்ளுத்தவறணைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தகைகளுக்கு அமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*(அ) தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களுக்கும் பொது நிபந்தனையாகும்.*

*(ஆ) 1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் கள்ளுத் தவறணை குத்தகைக்கு இடும் நிபந்தனைகளுக்கமைவானதாகும்.*

*2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் கேள்வியைச் சமர்ப்பிக்கப்படுவதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக மாதம்பை பிரதேச செயலகத்தில் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.*

*3. கேள்விப் பத்திரங்களை முறையாக பொறியிடப்பட்ட கடிதஉறையிலிட்டு இடது பக்கத்தில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு " 13 ஆம் இலக்கமுள்ள பம்பல கள்ளுத்தவறணைக் கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடப்பட்டு 2019.05.27ஆந் திகதி காலை 10.00 மணிக்கு முன்பு மாதம்பை பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இடுதல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் மேற்குறிப்பிடப்பட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாய் "பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், மாதம்பை" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.*

*4. கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய செயற்படல் வேண்டும்.*

*5. 2019, மே 27 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்த நேரம் மனுதாரர் அனைவரும் இச் செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.*

*6.மேற்குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்பனையாகாமல் தவறணைகள் ஏதும் இருப்பின், இவற்றுக்கான மீள் விற்பனை 2019.06.18ஆந் திகதி காலை 10.30 மணிக்கு இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைய நடைபெறும்.*

*இது தொடர்பாக மேலதிக விபரங்கள் மாதம்பை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.*

*ஏ. எம். சீ. எம். பிரேமசூரிய,*
*பிரதேச செயலாளர்,*
*மாதம்பை.*

*பிரதேச செயலகம்,*
*மாதம்பை,*
*2019, மே 02.*

**அட்டவணை**

| இல. | பகுதி | கிராமம் | தவறணை கேள்விப்பத்திரம் ஏற்கும் நேரமும் இறுதித் திகதியும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா ச. |
|---|---|---|---|---|
| 1. | பிட்டிகல் கோரளை பம்பல வடக்கு | பம்பல | 2019.05.27 காலை 10.30 மணி | 1,000.00 |

5- 347

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்படடுள்ளதென அறிவிக்கப்படுகின்றது .-

கம்பனியின் பெயர் : பி பீ என்ட் கிரெய்ட்ல் (பிரைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 00209325
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019.02.27
பதிவு முகவரி: இல. 62, -10/1, கொட்டுபெம்ம தெரு, கொட்டுபெம்ம ஹொரய்சன், எத்துல் கோட்டே

கம்பனியின் பெயர் : பெகொ (பிரைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 00209399
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019.03.02
பதிவு முகவரி: இல.24/2, அங்கம்பிடிய தெரு, எத்துல் கோட்டே, கோட்டே

சீ எல் சீ செகடேரியல் சேர்விசஸ் (பிறைவட்) லிமிடட்,
செயலாளர்கள்.

5- 103

---

## பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது .-

கம்பனியின் பெயர் : குளோபல் தெட் ஐ (பீவீஉ) எல்டீடி
பதிவிலக்கம் : பீவீ 00211111
பதிவு முகவரி: 102 /சி/ 10, முதுலந்த வத்த, கடியால, தெமன் ஹந்திய

சபையின் கட்டளைப் பிரகாரம்,

எச். டி.பி.பிசினஸ் சர்விஸ் (பிரைவேட்) லிமிடெட்,

5-149

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது-

கம்பனியின் பெயர் : எனெர்த் லங்கா (பிவிடி) எல்டிடி
பதிவிலக்கம் : பீவீ 00211242
பதிவு முகவரி : ஆர் ஏ த மெல் மாவத்தை, கொழும்பு 3

சபையின் கட்டளைப்படி,

எச். ரீ.பி.பிசினஸ் சர்விஸ் (பிரைவேட்) லிமிடெட்,

5-150

---

## பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது .-

கம்பனியின் பெயர் : பீ பி எல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் (பிறைவட்) லிமிடட்
கம்பனி இல. : பீவீ 00211002
பதிவு முகவரி: 4 ஆம் மாடி, ஹியுஜே கோர்ட், இல. 32, சேர் மொஹமட் மாகன் மார்கர் மாவத்தை, கொழும்பு 3
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019.04.12

கம்பனிச் செயலாளர்.

5-327

---

# ஏல விற்பனைகள்

**மக்கள் வங்கி - நுவரெலியா கிளை**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29 D ஆம் பிரிவின் கீழான விற்பனை

**மிகவும் பெறுமதிமிக்க சொத்து பகிரங்க ஏலவிற்பனை**

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், ஒய பலாத்த கோரளை , நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவு, நுவரெலியா நகர சபை எல்லைக்குட்பட்ட, புலுஎல இல. 353 1 கிராம அலுவலர் பிரிவு, பொரலந்த கிராமத்தில் அமைந்துள்ள "பீட்ரு எஸ்டேட்" எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் S. P. ரத்நாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1078 ஆம் இலக்க 1997.01.11 ஆந் திகதிய வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 01 எனும் காணித்துண்டு.

இது 00ஏ: 00றூ: 30.48பே. பரப்பளவானது. அத்துடன் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள் , மரங்கள், பயிர்கள் மற்றும் பாதை உரிமையும் உண்டு.

மேற்கூறிய காணி அண்மையில் கீழ்க்கண்டவாறு மீளளவை செய்யப்பட்டுள்ளது.-

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், ஒயபலாத்த கோரளை. நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவு, புலுஎல இல. 353 1 கிராம அலுவலர் பிரிவு, பொரலந்த கிராமத்தில் அமைந்துள்ள "பீட்ரு

எஸ்டேட் '' எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் நிமலா லியனகே என்பவரினால் தயாரிக்கப்பட்ட 959 ஆம் இலக்க 2013.03.04 ஆந் திகதிய வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 01 எனும் காணித்துண்டு.
இது 00ஏ. 00றூ. 30.48பே. பரப்பளவானது. அத்துடன் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் பாதை உரிமையும் உண்டு.

இது நுவரெலியா காணிப்பதிவகத்தில் புத்தகப் பகுதி/இருமடி இற்கு A 176/49 என்ற இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**காணிக்கு செல்வதற்கான வழி** : நுவரெலியாவிலிருந்து உடுபுசல்லாவை பாதையில் சுமார் 3 கி.மீ. தூரம் சென்றால் பாதையின் எல்லையில் வலது பக்கமாக இவ்வாதனம் அமைந்துள்ளது.

மக்கள் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2019 ஆம் ஆண்டு மே மாதம் 28ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் எம்மால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**: தயவு செய்து 2018.10.19ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2018.10.27 ஆந் திகதிய ''தினமின'', ''தினகரன்'', ''டெயிலி நியூஸ்'' ஆகிய செய்திப் பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்முதல் விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) பிரதேச சபை வரி 1% மற்றும் கொள்முதல் விலையில் 15% வெட் வரி ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையின் 2 1/2%;
(4) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500;
(5) விற்பனைச் செலவில் வேறு கட்டணங்கள் இருப்பின் அவையும்;
(6) விற்பனை அத்தாட்சிப்படுத்தலுக்கான முத்திரைக் கட்டணமும்.

கொள்முதலில் மிகுதி 90%, இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும் தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம், இல. 40, பார்க் வீதி, நுவரெலியா. தொலைபேசி இல.: 052- 2222557/ 052- 2222555 இற்குச் செலுத்தப்படல் வேண்டும் .

மேற்கூறிய பணத்தொகையை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள கொள்முதல் விலையில் 10% பணத்தொகையை இழக்க வேண்டி ஏற்படுவதுடன் இவ்வாதனத்தை மீண்டும் விற்பனை செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு

உரித்தாதனம் மற்றும் விபரங்களை மேற்கூறிய முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம,
இலங்கையின் முன்னோடியான அங்கீகாரம் பெற்ற ஏல விற்பனையாளர்கள்.
(அரச மற்றும் தனியார் வங்கிகளுக்காக மற்றும் நீதிமன்ற ஆணையாளர்கள்)

பிரதான அலுவலகமும் காட்சியறையும்:
24, டொரிங்டன் வீதி, கண்டி
தொலைபேசி : 081-2227593
தொலைபேசி/பெக்ஸ்: 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

நகர அலுவலகம்:
6A, பெயார் பீல்ட் கார்டன், கொழும்பு 8
தொலைபேசி: 011-2671467, 011-2671468
தொலைபேசி/பெக்ஸ்: 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera1892.com
இணையத் தளம்: www.sandslanka.com

5- 144

---

**மக்கள் வங்கி - (தொகுதிக் கிளை)**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29 D ஆம் பிரிவின் கீழான விற்பனை

**பெறுமதிமிக்க சொத்துக்கள் ஏலவிற்பனை**
**லியனகேமுல்ல, சீதுவ**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளே, தாசிய பற்று, நீர்கொழும்பு பதிவுப் பிரிவுக்கு உட்பட்ட, கட்டுநாயக்க -சீதுவ நகர சபை எல்லையில் லியனகேமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள, குருவேமுதியன்சேலாகே குருந்துவத்த என அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் Y.M. ரஞ்ஜித் யாப்பா அவர்களால் வரையப்பட்ட 2003 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதியிடப்பட்ட 9082A ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப் பட்டதுமான காணித்துண்டு.
காணியின் விஸ்தீரணம்: 00ஏ. 00றூ. 20பே. (0.0506 ஹெக்டேயர்) அத்துடன் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக.

பின்வரும் காணித்துண்டு ஊடாக அமைந்துள்ள பாதை உரிமையுடன்.-

வியனகேமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள, குருவே முதியன்சேலாகே குருந்துவத்த என அழைக்கப்படும் அனுமதிப் பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் M. J. சேதுங்க அவர்களால் வரையப்பட்ட 1986 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதியிடப்பட்ட 2586 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு D (15 அடி பாதைக்கான ஒதுக்கீடு) எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.

**ஆதனத்தை சென்றடையும் வழி** : கொழும்பிலிருந்து, கொழும்பு - நீர்கொழும்பு பிரதான பாதையில் சுமார் 15 கிலோ மீற்றர் அதே பாதையில் சென்று "எயாபோர்ட் காடின் ஹொட்டேல் " வரை செல்லவும். உரிய சொத்து அப்பாதையில் வலது பக்கமாக அமைந்துள்ளது.

மக்கள் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2019 ஆம் ஆண்டு மே மாதம் 30ஆந் திகதி வியாழக்கிழமை மு.ப 11.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் எம்மால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**: தயவு செய்து 2009, ஓகத்து 28 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியைப் பார்வையிடவும்.

உரிய சொத்து வரையறுக்கப்பட்ட தயாரத்ன அன்ட் கம்பனி தனியார் நிறுவனத்தின் மக்கள் வங்கிக்கு அடகு வைக்கப்பட்டது.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- ஏல விற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர் , விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி- விற்பனை விலையில் 1% (ஒரு சதவீதம்);
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5 % (இரண்டரை சதவீதம்);
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ.1,500;
(5) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும்;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி.

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் உதவிப் பொது முகாமையாளர்- அறவீடுகள், மக்கள் வங்கி, தலைமை அலுவலகம், 10 ஆவது மாடி, இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02.

தொலைபேசி இல.: 011- 2481613, 011- 2334281,
011- 2481546.

காணி உறுதியின் பிரதிகளையும், ஏனைய விபரங்களையும் மேற்கூறப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்கூறப்பட்ட தொகை குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% சதவீதத்தை பறிமுதல் செய்வதற்கும் உடைமையை மீள விற்பனை செய்வதற்குமான உரிமை வங்கிக்கு உண்டு.

'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும் /இரத்துச் செய்யவும் அதிகாரம் வங்கிக்குள்ளது'.

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம,
'ஒரே நாடு, ஒரே ஏலவிற்னையாளர்,
127வருட கால சேவை அனுபவம்.'

தலைமை அலுவலகம் :
24, டொரிங்டன் வீதி, கண்டி
தொலைபேசி : 081-2227593
தொலைபேசி/பெக்ஸ்: 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

நகர அலுவலகம்:
6A, பெயார் பீல்ட் கார்டன், கொழும்பு 8
தொலைபேசி: 011-2671467, 011-2671468
தொலைபேசி/பெக்ஸ்: 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera1892.com
இணைய தளம்: www.sandslanka.com

5-86

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான ஏல விற்பனை அறிவித்தல்

கிருள மெனேஜ்மன்ட் (பிறைவெற்) லிமிட்டெட்
கணக்கு இல.: 0008 1001 6310

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.02.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.04.12ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2019.04.01 ஆந் திகதிய "திவயின" (Divaina),"ஐலண்ட்"(Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான இரண்டு கோடியே தொண்ணூற்றி எட்டு இலட்சத்து இரண்டாயிரத்து ஐம்பத்தி மூன்று ரூபா தொண்ணூற்றி மூன்று சதம் (ரூபா 2,98,02,053.93) 2019, சனவரி 16 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை இரண்டு கோடியே எழுபத்தி எட்டு இலட்சத்து நாற்பதாயிரத்து நாநூற்று எழுபத்தி மூன்று ரூபா முப்பது சதம் (ரூபா 2,78,40,473.30) கட்டணத்திற்காக at the rate of Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு மூன்று வீதம் (3%)

(Floor Rate of 15%) மேலும் ஆறு இலட்சத்து எண்பத்தி ஒன்பதாயிரம் ரூபா (ரூபா 6,89,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைந்து வீதம் (15%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள் ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவு பெற்ற ஏலதாரரான பீ.கே.ஈ.சேனாபத்தி என்பவர் மூலமாக 2019ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதி மு.ப.11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், கல்பொட கோரலே மெத பத்துவையின் மாவனெல்லை பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் ஹிங்குல கிராம அலுவலர் பிரிவின் ஓவத்த மற்றும் ஹிங்குல கிராமத்தில் அமைந்த ''முத்தெட்டுவத்தெதென்ன வராகொள்ளஹேன'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. இத்தொட என்பவரால் தயாரிக்கப்பட்ட 2017, மே 15 ஆந் திகதியிடப்பட்ட இல. 2078 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: பத்மா என்பவர் உரிமம் கோரும் காணி, 10 அடி அகல வீதி மற்றும் சகுந்தலா இதுசாசி, சம்பா டி சில்வா, பத்மினி டி சில்வா, யூ. எம். ஆர். யூ. ரணவீர மற்றும் திஸ்ஸ லியனகே என்பவர்கள் உரிமம் கோரும் காணி; கிழக்கு: யூ. எம். ஆர். யூ. ரணவீர, திஸ்ஸ லியனகே, சிறிவர்தன மற்றும் சம்பிக்கா டி சில்வா என்பவர்கள் உரிமம் கோரும் காணி; தெற்கு : சிறிவர்தன மற்றும் சம்பிக்கா டி சில்வா என்பவர்கள் உரிமம் கோரும் காணி ஓவத்த வீதி மற்றும் பத்மா, சகுந்தலா இதுசாசி, சம்பிக்கா டி சில்வா என்பவர்கள் உரிமம் கோரும் காணி மற்றும் மேற்கு: சம்பிக்கா டி சில்வா என்பவர்கள் உரிமம் கோரும் காணி, ஓவத்த வீதி , பத்மா என்பவர் உரிமம் கோரும் காணி 10 அடி அகல வீதி மற்றும் சகுந்தலா இதுசாசி, சம்பிக்கா டி சில்வா, பத்மினி டி சில்வா என்பவர்கள் உரிமம் கோரும் காணி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் நான்கு ஏக்கர்கள் ஆறு தசம் ஒன்று சைபர் பேர்ச் (4ஏ. 0றூ. 6.10பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2078 எனும் வரைபடத்திற்கு அமைவாக கொழும்பு காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் H 189/123 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

5 - 169

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான ஏல விற்பனை அறிவித்தல்

என் . எச். என். எஸ். டி சில்வா
கணக்கு இல.: 1012 5930 8818

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.02.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.04.12ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2019.04.02 ஆந் திகதிய ''திவயின''(Divaina),''ஐலண்ட்''(Island), ''தினக்குரல்'' (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான அறுபத்தி நான்கு இலட்சத்து முப்பத்தி ஏழாயிரத்து எண்ணூற்றி எழுபத்தி ஆறு ரூபா தொண்ணூறு சதம் (ரூபா 64,37,876.90) 2019, சனவரி 10 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி அறுபத்தி இரண்டு இலட்சத்து எண்பத்தி இரண்டாயிரத்து நூற்று எண்பத்தி நான்கு ரூபா இருபத்தி நான்கு சதம் (ரூபா 62,82,184.24) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் நான்கு தசம் ஐந்து வீதம் (14.5%)வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள் ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவு பெற்ற ஏலதாரரான பீ.கே.ஈ.சேனாபத்தி என்பவர் மூலமாக 2019ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதி மு.ப.10.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரலே பல்லே பத்துவின் கடுவெல மா நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் ஷாந்தாலோக்ககம கிராம அலுவலர் பிரிவிற்குள் ஒறுவலையில் அமைந்த 5 ஆவது ஒழுங்கை வரிமதிப்பீட்டு இல. 39 ஐ ஏற்ற ''வனபொத்து மூக்கலான, ஒறுவல எஸ்ட்டேட் தெனகாஹாதெனிய மற்றும் மாஹாகெலே மூக்கலான'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. என். வெதகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 2018, பெப்புருவரி 26 ஆந் திகதியிடப்பட்ட இல. 1108 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: இல. 2535 எனும் வரைபடத்தின் லொட் 253; கிழக்கு: இல. 2535 எனும் வரைபடத்தின் லொட் 298 (5 ஆவது ஒழுங்கை); தெற்கு: இல. 2535 எனும் வரைபடத்தின் லொட் 257 மற்றும் மேற்கு: இல. 2535 எனும் வரைபடத்தின் லொட் 255 ஆகிய எல்லைகளுக்குள் அமைந்த

காணியின் விஸ்தீரணம் ஏழு பேர்ச் (0ஏ. 0றூ. 7பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன், கூறப்பட்ட இல. 1108 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் A இல. 2535 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 256 மீள் அளவீடாகும் அத்துடன் கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ளது:

கூறப்பட்ட ஒறுவலையில் அமைந்த "வனபொத்து மூக்கலான, ஒறுவல எஸ்ட்டேட் தெனகாஹாதெனிய மற்றும் மாஹாகெலே மூக்கலான" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். பீ. ஆர். பதிராஜ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1999, ஓகத்து 22 ஆந் திகதியிடப்பட்ட இல. 2535 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 256 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: லொட் 253; கிழக்கு: லொட் 298; தெற்கு: லொட் 257 மற்றும் மேற்கு: லொட் 255 ஆகிய எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஏழு பேர்ச் (0ஏ. 0றூ. 07பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன், கூறப்பட்ட இல. 2535 எனும் வரைபடத்திற்கு அமைவாக ஹோமகமை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் B 1366/54 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இல. 2535 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 298, 391B, 297, 233 மற்றும் 232 இன் மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

5-170

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான ஏல விற்பனை அறிவித்தல்

எஸ். எம். எல்.ஐ. சமரகோன் மற்றும் எஸ். எம். விமலச்சந்ர
கணக்கு இல.: 0225 5000 1210

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.01.31 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.03.22ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2019.03.18 ஆந் திகதிய "திவயின"(Divaina), "ஜலண்ட்"(Island), "தினக் குரல்"(Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான தொண்ணூற்றி இரண்டு இலட்சத்து தொண்ணூறாயிரத்து எண்ணூற்றி அறுபது ரூபா முப்பத்தைந்து சதம் (ரூபா 92,90,860.35) 2018, திசெம்பர் 20 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஐம்பத்தொரு இலட்சத்து பதின்மூவாயிரத்து எண்ணூற்றி முப்பத்தி நான்கு ரூபா அறுபத்தி எட்டு சதம் (ரூபா 51,13,834.68) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் ஆறு தசம் இரண்டு ஐந்து வீதம் (16.25%) மேலும் பதினேழு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து இருநூறு ரூபா (ரூபா 17,66,200.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) மேலும் இருபது இலட்சம் ரூபா (ரூபா 20,00,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு வீதம் (16%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள் ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவு பெற்ற ஏலதாரரான பீ.கே.ஈ.சேனாபத்தி என்பவர் மூலமாக 2019ஆம் ஆண்டு யூன் மாதம் 07 ஆந் திகதி மு.ப.11.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், அட்டகலன் கோரளே கந்தவெல் பத்துவை வெலிகெபொல பிரதேச சபை எல்லைகளுக்குள் பிரதேச செயலாளர் பிரிவின் எல்மல்பெ 220A கிராம அலுவலர் பிரிவின் பிட்டவெல கிராமத்தில் அமைந்த அஸ்வெத்தும்வெல" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். எம். டீ. எஸ். ஷாந்த என்பவரால் தயாரிக்கப்பட்ட 2015, யூன் 12 ஆந் திகதியிடப்பட்ட இல. 6345 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 187 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : F V P 682 எனும் வரைபடத்தின் லொட் 183 ; கிழக்கு : F V P 682 எனும் வரைபடத்தின் லொட் 186 மற்றும் இதே காணியின் ஒரு பகுதி; தெற்கு : வீதிக்கான ஒதுக்கம் மற்றும் மேற்கு : F V P 682 எனும் வரைபடத்தின் லொட் 183 அகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் முப்பத்தி எட்டு பேர்ச் (0ஏ. 1றூ. 38பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 6345 எனும் வரைபடத்திற்கு அமைவாக இரத்தினபுரி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் T 14/ 102 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

5- 186

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவினதும் கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல.82542028

கொழும்பு 04, வஜிர வீதி, இல. 12/14A 1/1 ஐச் சேர்ந்த திரு. வகாவத் ஆரச்சிகே அசங்க பிரேமசந்திர இல. 12/14A 1/1 வஜிரா வீதி, கொழும்பு 04 இல் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19ஆ ம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2019.03.29ஆந் திகதிய 2117ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2019.03.18 ஆந் திகதிய ''டெய்லி நியூஸ்'', ''தினகரன்'' மற்றும் '' தினமின'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் ரீ அன்ட் எச் ஒக்சன்ஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம். எச். துசித்த கருணாரத்ன அவர்கள் 2019.05.27 ஆந் திகதி பி. ப.1.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்டமுனை வட்டு வஸ்கடு தெபத்தயில் களுத்துறை பிரதேச சபை எல்லைகளுள் களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவில் பனாபிட்டிய வடக்கு கிராம அலுவலர் பிரிவு இல. 711/Bல் பனாபிட்டிய மற்றும் வத்தேகொடயில் அமைந்த ஹொரணை வீதி வரிமதிப்பு இல. 848/27 ஐக் கொண்ட ''மகுருமுல்ல கெலே மற்றும் மகுருமுல்ல அஸ்வெத்தும முல்லேவத்த அல்லது கொடெல்லவத்த மற்றும் மகுருமுல்ல வத்த'' என அழைக்கும் காணியின் தொடர்ச்சியான காணித்துண்டுகள் 6 மற்றும் 5 உத்தரவு பெற்ற நில அளவையாளர் எச். பி. தி. எஸ். தாப்ரூ தயாரித்த 02.04.2006 ஆந் திகதியிட்ட வரைபட இல. 2169 இல் விபரித்த துண்டு A2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு A2 வடக்கில்: துண்டு A1 என பதிவுசெய்திருப்பினும் துண்டு A1 உம்; கிழக்கில் : 20 அடி அகலப்பாதைக்கான ஒதுக்கமும்; தெற்கில் : துண்டு 7 மற்றும் துண்டு B உம்; மேற்கில் : வில்பேர்ட் சேனாரத்னவின் காணியும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 2169 இன் படி இருபது தசம் ஐந்து சைபர் பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 20.50பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வளர்பவையும் ஆகும். இது பாணந்துறை காணிப்பதிவகத்தில் C 122/58 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### இரண்டாவது அட்டவணை

மேற்குறிப்பிட்ட பனாபிட்டியவில் அமைந்த ''மகுருமுல்ல கெலே மற்றும் மகுருமுல்ல அஸ்வெத்தும'' என அழைக்கும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் டீ. ஜே. நாணயக்கார தயாரித்த 21.10.1968 ஆந்திகதியிட்ட வரைபட இல. 1370 இல் விபரித்த துண்டு A (பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில்: P. W. D. பாதையும்; கிழக்கில்: அதே காணியின் மீதிப்பாகமும்; தெற்கில்: வைத்தியர் குலசிங்ஹவுக்குச் சொந்தமான இஹலவெலயும்; மேற்கில்: துண்டுகள் 1, 5, 8, 9, 18, 19, 28-30, 34 மற்றும் அதே காணியின் துண்டுகள் B. C. D மற்றும் E உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 1370 இன் படி ஒரு றூட் முப்பத்தாறு பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 36பே.) விஸ்தீரணமுடைய காணி ஆகும். இது பாணந்துறை காணிப்பதிவகத்தில் C16/129 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட பனாபிட்டியவில் அமைந்த ''மகுருமுல்ல கெலே மற்றும் மகுருமுல்ல அஸ்வெத்தும'' என அழைக்கும் காணி மேற்குறிப்பிட்ட வரைபட இல. 1370ல் துண்டு B (பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கில் : அதே காணியின் துண்டுகள் 5 மற்றும் 6 உம் ; கிழக்கில்: அதே காணியின் துண்டு A உம்; தெற்கில் : அதே காணியின் துண்டு 8 உம்; மேற்கில் : அதே காணியின் துண்டு 7 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 1370 இன் படி இருபது பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணமுடையது. இது பாணந்துறை காணிப்பதிவகத்தில்C35/68 இல் பதிவு செய்யப் பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் சட்டளைப்படி.

(திருமதி) எல். பீ. ஆரியசிங்ஹ,
சிரேஷ்ட முகாமையாளர்.

இலங்கை வங்கி,
சுதந்திர சதுக்க மேற்தரக்கிளை.

5-176

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவினதும் கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல. : 80650878, 80651660.

அலுத்கம, களுவாமோதர, தேவால வீதி, இல. 74ஐச் சேர்ந்த திருவாளர்கள் ஹெட்டெல் புளூ சபயார் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

பங்காளர்கள்:

1. அளுத்கம, களுவாமோதர, தேவால வீதி, ''ராஜிக்'', இல. 309 B/1A ஐச் சேர்ந்த திரு. வெதிகெதர உதாரம மந்து ராஜிக் தி சில்வா

2. திருமதி தேமுனி நாளணி சேபாலிகா தி சில்வா

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19ஆ ம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2019.03.29ஆந் திகதிய 2117ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2019.03.18 ஆந்திகதிய ''டெய்லி நியூஸ்'', ''தினகரன்'' மற்றும் '' தினமின'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் ரீ அன்ட் எச் ஒக்சன்ஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு . எம்.எச். துசித்த கருணாரத்ன அவர்கள் 2019.05.27ஆந் திகதி மு.ப.10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

